[2006 ஜனவரி 21

திரு. எஸ்.கே. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியாருடைய துணிவையும், தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சாற்றலையும், கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர் புரட்சித் தலைவருடைய ஒரே வாரிசாகவும், இன்றைய தமிழகம், நாளைய பாரதம், ஒட்டுமொத்த மக்கள் சக்தியாக விளங்கிக் கொண்டிருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பார்க்கிறேன், வணங்குகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவைப் பொறுத்தவரை, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் நிதிநிலை சீர்கேட்டைச் செய்துவிட்டுச் சென்ற அன்றையதினம் தொடுக்கப்பட்ட வினா. ஆனால், அந்த வினாவிற்கு இன்றைக்கு அவசியமே இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காரணம், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிதியாதாரங்களைக் கொடுத்து, இன்றைக்கு அத்தனை கட்டடங்களையும் நல்லமுறையில் பராமரித்துக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக அம்மாவினுடைய பொற்பாதங்களில், எனது தொகுதிவாழ் மக்களின் சார்பில் நன்றியினை நான் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திருமதி வளர்மதி ஜெபராஜ், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

74—

மகப்பேறு மருத்துவமனை

*** 28556—திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு தொகுதி, பிள்ளைமார் தெருவில், மாநகராட்சி தொடக்கப் பள்ளி பல ஆண்டுகளாக நடைபெறாமல் உள்ளதால், அந்த இடத்தில் மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மேற்கு தொகுதி, பிள்ளைமார் தெருவில் அமைந்துள்ள மாநகராட்சிப் பள்ளி இடத்தில் மகப்பேறு மருத்துவமனை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

2006 ஜனவரி 21]

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகப்பேறு மருத்துவமனையை தற்போது அமைக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவொரு மிக முக்கியமான இடம். ஆரப்பாளையம் பஸ் ஸ்டாண்டிலிருந்து மிக அருகிலே அந்த இடம் காலியாக பயன்படுத்தப்படாமல் உள்ளது. அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அந்த இடத்தை எப்படியாவது பயன்படுத்த வேண்டுமென்று என்னிடத்திலே வேண்டுகோள் விடுத்து, அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே உள்ள பழைய கட்டடம், பயன்படுத்தப்படாமல் உள்ள பழைய கட்டடம்; காலியிடம், கடந்த வருடம் தோராயமாக 40 சதுர அடி நீளம், 25 சதுர அடி அகலம் கொண்ட ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டு, அதுவும் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்தால், தோராயமாக 20 செண்ட் இடம் அந்த இடத்திலே இருக்கும் என்று நான் கருதுகிறேன். மதுரை மாநகராட்சியின் இதயப் பகுதியாகக் காணப்படுகின்ற அந்த இடத்தில், அந்த இடம் பயன்படுத்தப்படாமல் உள்ளது. அது அந்தப் பகுதி மக்களிடத்திலே ஓர் ஏக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அந்தப் பகுதியிலே வேளாளர் தெரு என்ற ஒரு தெருவில் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலிலே திருமணம் செய்துவிட்டு வருகின்ற ஏழை மக்கள், விருந்தினரை உபசரிப்பதற்கு இடம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகப்பேறு மருத்துவமனை கட்ட முடியாவிட்டாலும்கூட, அந்த இடத்திலே அந்த ஏழை மக்கள் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு ஒரு திருமண மண்டபத்தையாவது கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி தொடக்கப் பள்ளி அமைந்துள்ள இடமானது சுமார் 150 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். ஒரு திருமண மண்டபம் கட்டவேண்டுமென்றால், குறைந்தபட்சம் 300 சதுர மீட்டர் பரப்பரளவு உள்ள இடமாவது தேவைப்படுகிறது. எனவே, இந்த இடத்தில் திருமண மண்டபம் கட்டப் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால் அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலி இடத்தை மட்டும்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

சொல்கிறார்கள் என நான் கருதுகிறேன். நான் கேட்பது பயன்படுத்தப்படாமல் இருக்கிற பழைய கட்டடம். காலி இடம். கடந்த வருடம் கட்டப்பட்டிருக்கிறது; 40 அடி நீளம் 25 அடி அகலம்—எல்லாவற்றையும் சேர்த்து திருமண மண்டபம் கட்ட ஆலோசனை செய்யப்படுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் மதுரைக்கு வரும்போது கூப்பிட்டுக் கொண்டுபோய்க் காட்டுங்கள்.

வினா எண் 75, திரு. கே.டி. பச்சைமால், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

75—

விளையாட்டு துணை மையம்

***73171—திரு. கே.டி. பச்சைமால்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, இராஜாக்கமங்கலத்தில் இந்திய விளையாட்டு துணை மையம் கட்டுமானப் பணி தாமதப்பட காரணம் என்ன?

(ஆ) விரைவில் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குளச்சல் தொகுதி, இராஜாக்கமங்கலத்தில் இந்திய விளையாட்டு துணை மையம் அமைக்கும் பணி மத்திய அரசின் திட்டப் பணி. இத்திட்டம் மத்திய அரசின் ஒப்புதல் வழங்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

(ஆ) இந்த மையம் அமைக்கத் தேவையான இடத்திற்கு இதுவரையில், மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை இயக்குநர் அவர்களின்